
சைகிள் ஓட்டுனர்


கதாசிரியர் ஆலென் ஸே

மொழி பெயர்ப்பு அனுமிதா



நான் சிறுவனாக இருந்தபோது தென் தீவில் இருந்த பள்ளி ஒன்றிற்குச் சென்றேன். உயரமாக, பசுமையுடன் இருந்த மலைக்கு ஏறும் வழியில் இந்த பள்ளிக்கூடம் இருந்தது. மரத்தால் ஆன இந்த கட்டிடம், கால போக்கில் பழமையாகி சாம்பல் நிறம் போற்றது. வலுவாகக் காற்று வீசும் போது மரங்களிலிருந்து அலை ஓசை கேட்க, கட்டிடம் ஒரு பாய்மர கப்பல் போல் கிறீச்சிட்டது. விளையாட்டு மைதானத்திலிருந்து நகரம், துறைமுகத்தில் இருந்த கப்பல்கள், மினுமினுத்த சமுத்திரம் என எல்லாவற்றையும் எங்களால் பார்க்க முடிந்தது.






அப்போது வசந்த காலம்; அன்று எங்கள் பள்ளியின் விளையாட்டு நிகழ்வு; அனைத்து மாணவர்களும், ஆசிரியர்களும், முதல் மணி அடிப்பதற்கு முன்பே விளையாட்டு மைதானத்திற்கு வந்து சேர்ந்துவிட்டார்கள்.

ஸ்ரீமதி மொரிடா “எல்லோரும் தலைப்பட்டி மறக்காமல் கொண்டு வந்திருக்கிறீர்களா?” என்று கேட்டார். அவர் தான் எங்களுடைய முதல் வகுப்பு ஆசிரியர். மிக உற்சாகத்துடன் நாங்கள் அவரிடம் காண்பித்தோம். ஒரு பக்கம் சிவப்பு நிறமாகவும், மற்றொரு பக்கம் வெள்ளையாகவும் இருந்தன அந்த பட்டிகள்.

“நம்முடைய் அணி சிவப்பு நிறம் என்பது ஞாபகம் இருக்கட்டும்”, என்று அவர் கூறினார்.





பள்ளியில் இருந்த துடைப்பங்களினால் நாங்கள் விளையாட்டு மைதானத்தைப் பெறுக்கி, சாக்குக்கட்டி பொடியால் கோடுகள் போட்டோம்.


எங்கள் பெற்றோர்கள் மதிய உணவுகளை அடுக்குப் பெட்டிகளிலும், தேநீரை கெட்டில்களிலும் நிரப்பி கொண்டு வந்திருந்தார்கள். பிறகு, முட்டை வடிவ பந்தய பாதையைச் சுற்றி வைக்கோல் பாய்களைப் பரப்பி அமர்ந்தனர்.



எல்லாம் தயாரானதும் ஸ்ரீமதி மொரிடா மணி அடித்தார். அப்போது மணி ஒன்பது. அதிபர் மேடையில் ஏறி, “பெற்றோர்களே, குழந்தைகளே, என் சக ஆசிரியர்களே, நாம் யாவரும் இங்கு கூடியிருப்பது விளையாட்டு திறன் போட்டிக்காக என்பதை நினைவில் கொள்ள வேண்டும்; தோல்வியோ, வெற்றியோ, எல்லொரும் கொண்டாடுவோம்” என்றார்.

நாங்கள் யாவரும் மகிழச்சியுடன் ஆரவாரம் செய்து கை தட்டினோம்.


யாவரையும் விட மிக்க சிறியவர்களுடன் பந்தயம் ஆரம்பித்தது. ஒவ்வொரு முறையும் ஆறு பேர்கள் ஆரம்ப கோட்டில் வரிசையாக நின்றோம்.



“ரெடி, ஸ்டெடி, கோ!” கலை ஆசிரியர் முழங்கினார். முதல் வகுப்பு மாணவர்களான நாங்கள் பாய்ந்து பந்தய பாதையை அதி வேகமாக சுற்றி வந்தோம். ஆசிரியர்களும் எங்களுடன் ஓடி, கத்தி ஊக்கமூட்டினார்கள். மேல் வகுப்பு மாணவர்கள் கொடிகளையும், தலைபட்டிகளையும் வேகமாக ஆட்டி, மலைகளிலிருந்து இடி கர்ஜிப்பது போல், எதிரொலி கேட்கும் வரை, தொண்டை கிழிய கத்தி ஆரவாரித்தார்கள்




ஜெயித்தவர்கள் நடுவர் இருந்த மேடைக்குச் சென்று, அதிபரிடமிருந்து, வெள்ளை காகிதத்தால் சுற்றி, பொன் சரடால் கட்டிய பரிசுகளைப் பெற்றார்கள்.. அதில் ஆரஞ்சு பழங்கள், அரிசியில் செய்த இனிப்பு பண்டங்கள் மற்றும் பென்ஸில்கள் இருந்தன.



ஆறாவது வகுப்பு மாணவர்கள் போட்டி முடியவும், நாங்கள் எல்லோரும் மிக்க ஆவலுடன் காத்திருந்த மதிய உணவு நேரமும் வந்துவிட்டது. இரண்டு நாட்களாக ருசியுள்ள பண்டங்களைத் தயாரித்து என் அம்மா கொன்டு வந்திருந்தார். மெருகால் பூசப்பட்டு, வேலைப்பாடு கொண்ட அடுக்கு பெட்டிகளில் பதனிடப்பட்ட ஆரஞ்சு பழத்தோல் துண்டுகள், முட்டை உருண்டைகள், சுவையூட்டும் அரிசி மற்றும் சுட்ட மீன் என பல ஆகாரங்களுடன் ஆப்பிள், பீச் பழங்களும், விதவிதமான இனிப்புப் பண்டங்களும் இருந்தன.





பகலில் கயிறு இழுப்பு போட்டியும், முதுகில் ஏறி சவாரி செய்யும் போட்டியும் இருந்தன. அதன் பிறகு வயதானவர்களுக்கான போட்டிகளும் நடந்தன.



பெற்றோர்களும், ஆசிரியர்களும் ஜோடி-ஜோடியாக ஒருவர் மற்றொருவர் காலுடன் பட்டியால் தங்களை இணைத்து, இழுத்துக் கொண்டு விளையாட்டு மைதானம் சுற்றி ஓட, அவர்கள் தடுக்கி ஒருவர்மேல் ஒருவர் விழுந்த போது நாங்கள் சந்தோஷத்தில் கூச்சலிட்டோம்.




ஸ்ரீமதி மொரிடாவையும் யாரோ ஒருத்தருடைய அப்பாவையும் நாங்கள் உற்சாகப்படுத்திக் கொண்டிருந்த சமயம் மைதானத்தில் ஓசை அடங்கி நிசப்தமாயிற்று. நாங்கள் பேசுவதையும், நகருவதையும் நிறுத்திவிட்டு வாயிற்கததவை திகைத்துப் போய் பார்த்துக் கொன்டிருந்தோம்.

இரு அன்னியர்கள், வேலி மேல் சாய்ந்துக் கொண்டு எங்களை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரும் அமெரிக்க சிப்பாய்கள். அதில் வெள்ளையாக இருந்தவரின் தலைமயிர், தீ நிறம் போல், செம்மஞ்சளாக இருக்க, மற்றவரின் முகம் அட்டை கறுப்பு. அவர்கள் கழுத்துக் கச்சையும், மெத்தென்ற தொப்பியும் அணிந்து சிவப்பு கோடுகள் போட்ட சட்டைக்கையுடன் சீறுடையில் இருந்தார்கள். அவர்களிடம் துப்பாக்கி இல்லை.

”பார், அவர் எவ்வளவு கறுப்பாக இருக்கிறார்!

“செம்மஞ்சள் மயிரை பார்!”, என்று நாங்கள் கிசுகிசுதோம்.

ஒரு வருடம் கூட ஆகவில்லை, சமீபத்தில் தான் சண்டை முடிவடைந்தது. அமெரிக்க சிப்பாய்களின் ராணுவ தளம் கப்பல் துறையில் தான் இருந்தது ஆனால் எங்கள் மலை பிரேதசத்தில் நாங்கள் பார்த்ததே இல்லை. எனக்கு பயமாக இருந்தது




அன்னியர்கள் எங்களைப் பார்த்து கை ஆட்டி புன் முறுவல் செய்தார்கள். கருப்பு மனிதர் வேலியைத் தாண்டி எங்களை நோக்கி வந்ததும் நாங்கள் எல்லோரும் பின்வாங்கி வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தோம். நான் இது வரை இவ்வளவு உயரமான மனிதரைப் பார்த்ததே இல்லை. அவருடைய உடைகள்! எவ்வளவு நேர்த்தியான மடிப்புகள்! காலணிகளோ மெருகேறி பளபளவென்று இருந்தன.

வாயிற்கதவு அருகில் நிறுத்தி வைத்திருந்த அதிபரின் சைகிளை நோக்கி நடந்து வந்த அவர். சைகிளைச் சுட்டிகாட்டி நடுவர் இருந்த மேடையை நோக்கி திரும்பினார். அதிபர் நிதானமாக எழுந்து நின்றார்.

“அவருக்கு ஸைகிள் வேண்டுமாம்”, யாரோ கூறினார்கள்


“அது என்னெவென்றே அவருக்கு ஒருவேளை தெரியாதோ”.

“இல்லை, அவர் சவாரி செய்ய வேண்டுமாம்”.




அதிபர் அமெரிக்கர் அருகில் சென்று தலை தாழ்த்தி வணங்கினார். ஒரு சிறுவன் பெரிய மனிதர் ஒருவரை வரவேற்பது போல் இருந்தது. அந்த உயரமான மனிதர், கிட்டதட்ட, அதிபருடைய தலையோடு மோதுவது போல் மிகவும் குனிந்து வணங்கியதும் நாங்கள் இளித்துக் கொண்டிருந்தோம். .

ஒருவருக்கொருவர், கைஜாடையிலேயே பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்தோம். அதிபர் சைகிளைச் சுட்டிகாட்டிவிட்டு அந்த மனிதரைப் பார்த்து தலை அசைத்தார். நீங்கள் என் சைக்கிளை ஓட்டலாம் என்று அவர் சொல்வது போல் இருந்தது. சிப்பாய் தன் இரு உள்ளங்கைகளயும் சேர்த்து வைத்துப் புன்னகை செய்தார்.



அந்த நபர் சைகிளைக் கைப்பிடியால் தூக்கி, 'ஸ்டேன்டை' உதைத்தார். பிறகு அதை தள்ளிக் கொண்டு விளையாட்டு மைதானத்தின் மத்தியில் கொண்டு வந்தார். சைகையால் எங்களை அகற்றிவிட்டு தன்னுடைய சினேகிதரைக் கூப்பிட்டார்.

அந்த சிநேகிதரும் கிட்டதட்ட இவர் உயரம் தான். தன்னுடைய தொப்பியை எடுத்து எங்களை அவர் வணங்க மிகவும் குனிய வேண்டியிருந்தது. சிறுபிள்ளைத்தன சிரிப்புடன் நாங்களும் வணங்கினோம்



கருப்பர் தன் ஜாக்கெட்டைக் கழற்றி வெள்ளையரிடம் கொடுத்தார். பிறகு தன் நீண்ட கால்களால் சைகிள் மேல் ஏறி, கொஞ்ம்-கொஞ்சமாக வட்டத்தைப் பெரியதாக்கி ஓட்டிக் கொண்டிருந்தார். தன் நண்பரை வேகமாக போவதற்கு கொடியை வீசுவது போல் கையிலிருந்த ஜாக்கெட்டை ஆட்டி. ஊக்குவித்தார்.



ஓட்டிக் கொண்டிருந்தவர் திடீரென கைப்பிடியை இழுத்து முன் சக்கரத்தைத் தரையிலிருந்து உயர்த்தினார்.

“அதோ பார்!” நாங்கள் திகைத்துப் போனோம். “

“எப்படி அவரால் இப்படி ஓட்டமுடியும்?”

“என்ன சாகசமா ஓட்டுகிறார்!” என கலை ஆசிரியர் கூறினார்.



செம்மஞ்சள் தலைமயிருடன் இருந்தவர் வித்தையரங்கு நிபுணர் (ரிங் மாஸ்டர்). சைகிளுடன் கூடவே ஓடி அவர் தன் கூட்டாளரை உற்சாகப்படுத்தினார். ஓட்டுனர் ஒரு சக்கரத்திலெயே குறுக்கும் நெடுக்குமாக வளைந்து-வளைந்து சுற்றி ஓட்டினார். எங்களுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.



பிறகு, அவர் சைகிளை பின்னோக்கி ஓட்ட ஆரம்பித்ததும் தன் உடலைப் பின்னால் திருப்பிக் கொண்டு அமர்ந்தார்; ஆகவே, தான் போகும் திசையைப் பார்ப்பதற்கு முகத்தை முறுக்கி திருப்ப வேண்டியிருந்தது. தன்னுடைய நீண்ட கை, கால்களை அவர் இயக்கிய விதம் ஒரு சிலந்தியின் நடன ஆட்டம் போல் தோற்றமளித்தது. விபயப்பில் நாங்கள் கூச்சலிடோம்.



பிறகு முன்பும், பின்புமாக, அவர் மாற்றி மாற்றி ஓட்டி, முன் சக்கரத்தை ஜைராஸ்கோப் போல் சுழற்றினார். வித்தை அரங்கு நிபுணரைப் பார்த்து ஏதோ கத்தி சொல்லவும் அவர் பின் இருக்கையைப் பிடித்து தன்னால் முடிந்தவரை வேகமாத் தள்ளி விட்டுவிட்டு நின்றுவிட்டார்.




வேகம் பிடித்ததும், கருப்பர் மிதிஅடிகளில் எழுந்து நின்று கைப்பிடியின் மேல் சாய்ந்து தன் இரு கால்களையும் பின் இருக்கையின் மேல் ஊன்றி நின்றார்.



அவர் அந்தரங்கத்தில் சவாரி செய்வது போல் தோண்றியது; அவரது தொப்பி பறக்க, கழுத்துக் கச்சை காற்றில் அடித்துக்கொள்ள, தடையின்றி இழைந்து செல்லும் பிரம்மாண்டமான தும்பியைப் போல், லாகவத்துடன் அநாயசமாகப் பறப்பதுபோல் இருந்தது.






இறுதியாக சைக்கிள் ஓட்டம் நின்றதும், விளையாட்டு மைதானத்தில் பெரிய கைதட்டல்களும், ஆரவாரமும் முழங்கின. சவாரி செய்தவர் மூச்சுவாங்க திணறிக் கொண்டு சிரித்தார் வித்தையரங்கு நிபுணர் ஓடி வந்து அவரைக் கட்டிக் கொண்டு அப்படியே தூக்கிவிட்டார். அவர்களைக் கூட்டமாகச் சுற்றிக் கொண்டு நாங்கள் குதித்துக் கொண்டும், கத்திக் கொண்டும் இருந்தோம்.


அதிபர் மிக சிரமப்பட்டு கும்பலை விலக்கி வந்துக் கொண்டிருந்த போது , கருப்பர் அவரிடம் சென்றார். பழைய நண்பர்கள் போல் இருவரும் கைகளைப் பிடித்துக் கொண்டார்கள்.

அதிபர் கைகளைத் தூக்கி எங்களை அமைதி படித்தினார். சிப்பாய்களின் கைகளைப் பிடித்து மேடைக்கு அழைத்துச் சென்றார். பிறகு ஸ்ரீமதி மொரிடாவிடம் அவர் ஏதோ கிசுகிசுவென்று சொல்ல, பரிசு அட்டவணையில் இருந்து மிகப்பெரிய பெட்டி ஒன்றை அவர் கொண்டு வந்தார்.



அதிபர் மேடைக்குச் சென்று அமெரிக்கர்களிடம் பெட்டியைக் கொடுத்தார். ஒரு பெரிய வீரனுக்கு விருது கொடுக்கும் பேரரசர் போல் அவர் தோற்றமளித்தார். சைகிள் சவாரி செய்த அமெரிக்கர் பரிசை இரு கைகளாலும் வாங்கிக் கொண்டு அதை தன் தலைக்கு மேல் தூக்கினார். அதன்பிறகு கூட்டத்துப் பக்கம் திரும்பினார்





“நன்றி-நன்றி”, என்பதையே அவர் ஜப்பானியர் மொழியில் “அரி-கா-தோ, அரி-கா-தோ என்றார். பள்ளிக்கூடம் முழுவதும் அவரை வணங்கி, மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தது.

அமெரிக்கர்கள் தங்கள் தொப்பிகளை அணிந்துக் கொண்டு வாயிலைவிட்டு வெளியேறினார்கள். கை காட்டிக் கொண்டும், சிரித்துக் கொண்டும், மலயின் கீழ் இருவரும் தோளோடு தோள் இணைந்து சென்றார்கள. சாலையின் உள் வளைவைச் சுற்றி அவர்கள் மறைந்து போகும் வரை நாங்கள் இருவரையும் கண் பார்வையாலேயே பின் தொடர்ந்தோம்.

முற்றும்

